**இலங்கையின் இரண்டாவது வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்த தடுப்புச் செயற்திட்டம் -2017.**

இலங்கையின் இரண்டாவது வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்த தடுப்புச் செயற்திட்டத்தின் 2017 யூன் 09 முதல் 2018 மார்ச் 09 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூன் 09 ஆம் திகதிய 0533 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் VI ஆம் உறுப்புரை – 4.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் உள்நாட்டலுவல்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் 08 மாவட்ட செயலகங்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. 2017 மே மாதத்தில் வெள்ள மற்றும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களிற்காக உயிர் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 307.46 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 02 மில்லியனானதுடன் மொத்த கிரயமும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 09 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 திசெம்பர 09 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2018 மார்ச் 09 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கொடையளிக்கும் முகவரினதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) 2018 மார்ச் 09 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(இ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

மேல், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள 08 மாவட்டச் செயலகங்களால் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் உரிய மாவட்டச் செயலகங்களிற்கு ரூபா 287.98 மில்லியன் தொகையான நிதி ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டிருந்தன. ஆகையால் மாவட்டச் செயலகங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் விஞ்ஞாபன அடிப்படையில் மீளாய்வுக் காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வு காலப்பகுதி மற்றும் 2018 மார்ச் 09 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **2018 மார்ச் 09 இல் உள்ளவாறு மீளாய்வுக் காலப்பகுதியின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஏடிபீ | 2.00 | 307.46 | 1.87 | 287.98 |
| | **2.00** | **307.46** | **1.87** | **287.98** |

ரூபா 19,477 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 126,698 மீதியானது 2018 மார்ச் 09 இல் உள்ளவாறு செயற்திட்ட செயற்பாடுகள் முடிவுறுத்தப்படும் திகதியில் செலவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஐ.அ.டொலர் 111,212 மீதி மாத்திரம் 2018 நவம்பர் 08 இல் கொடையளிக்கும் முகவரிற்கு மீள்நிதியிடப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவசர மீட்பு உபகரணங்கள், மருத்துவக் கருவிகள், உணவுகள், நீர் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார முறைமைகள், இடைத்தங்கல் முகாம்கள், தனிப்பட்ட சுகாதார கருவிகள் மற்றும் அவசர தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் சிதைவு கழிவுப்பொருட்களை மாற்றுதல், உரிய பகுதியை ஒதுக்கிக்கொடுத்தல், பயனற்ற இடிபாடுகளை பாதுகாப்பாக அகற்றுதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் பெறுகையின் கீழ் 10 பிரதான நடவடிக்கைகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 மார்ச் 09 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகங்கள் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் அவை தொடர்பான செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

செயற்திட்டமானது களுத்துறை, காலி, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் 17 இடைத்தங்கல் முகாம்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்கியிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் இடைத்தங்கல் முகாமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 11.55 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணங்கப்பட்ட 2017 நவம்பர் 25 ஆம் திகதியிலிருந்து 102 நாட்கள் தாமதத்துடன் 2018 மார்ச் 07 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) களுத்துறை மாவட்டத்தின் பளிந்த நுவரவிலுள்ள இடைத்தங்கல் முகாமில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் கிணறானது தண்ணீரின் தரம் குடிக்கும் நோக்கங்களிற்கு பொருத்தமற்றிருந்ததால் பயன்படுத்தப்படாது விளைவற்றிருந்தமை 2018 திசெம்பர் 21 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் ரூபா 2.95 மில்லியன் கிரயத்தில் கேகாலை மாவட்டத்தில் வெள்ளங்கல்ல ஆரம்பக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிற்கு போதியளவு சுகாதார மற்றும் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(இ) கொடையளிக்கும் முகவரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் உரிய பிரதேச செயலாளரிற்கு கையளிக்கப்படுதல் வேண்டும். கேகாலை, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் ரூபா 23.28 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 03 இடைத்தங்கல் முகாம்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் உரிய பிரதேச செயலாளர்களிற்கு கையளிக்கப்பட்டிருக்காதமை களப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் இரத்தினபுரி மாவட்டத்தின் கரங்கொடவில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம் தவிர அவசர நிலைமைகளின் போது இடைத்தங்கல் முகாம்களை பயன்படுத்துவதற்கு மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கிய இடம்பெயர்ந்த நபர்களிற்கு போதியளவு வசதிகள் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**3.4 விளைவற்ற சொத்துக்கள்**
-----------------------------------------

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கேகாலை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிற்கு பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 5 மில்லியன் கிரயத்தில் 111 மின்பிறப்பாக்கிகளை செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதில் 91 மின்பிறப்பாக்கிகள் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் களஞ்சியங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது களஞ்சியத்தில் காணப்பட்ட 16 மின்பிறப்பாக்கிகள் மாத்திரமே பௌதீக மெய்மையாய்வுகளிற்காக கிடைக்கப்பெற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இயந்திரங்களை ஒழுங்காக பராமரிக்கும் சேவைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் அத்தகைய இயந்திரங்களின் செயற்படும் நிலைமையை அளவிடுவதற்கு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கேகாலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக மீளாய்வுக் காலப்பகுதியின் போது செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 73 உயிர் பாதுகாப்பு ஜக்கெற்றுக்களில் 23 உயிர் பாதுகாப்பு ஜக்கெற்றுக்கள் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. மிகுதி உயிர் பாதுகாப்பு ஜக்கெற்றுக்கள் கேகாலையிலுள்ள பிராந்திய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் களஞ்சியங்களில் பயன்படுத்தப்படாதிருந்தன. மேலும் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதியின் போது பலாங்கொடை மற்றும் கொலன்ன பிரதேச செயலகங்களிற்கு 34 விளக்குகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் உரிய அலுவலகங்களால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் பலாங்கொடை பிரதேச செயலகம் விளக்குகளை பெற்றிருக்காத அதே நேரம் கொலன்ன பிரதேச செயலகம் 08 விளக்குகளை மாத்திரமே பெற்றிருந்தது.

**3.5 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**
-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவற்றின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2 மில்லியன் தொகையான குறைநிரப்பு ஒதுக்கீட்டில் மீளாய்வுக் காலப்பகுதிக்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் பதவியணியினரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 781,254 கூட்டுமொத்தமான படிகள் உரிய அமைச்சின் கிரயமாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்திட்டக் கண்காணிப்பு செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.